(ஆ) ஆம் எனில், காலதாமதத்திற்கு காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கமுதி-அபிராமம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குத் தேவையான குடிநீர் எற்கெனவே அமைக்கப்பட்டுள்ள மூன்று ஆழ்குழாய்க் கிணறுகளிலிருந்தும் மற்றும் புதிதாக அமைக்கப்பட விருக்கும் நான்கு ஆழ்குழாய்க் கிணறுகளிலிருந்தும் விநியோகிக்கப் படவுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் தேர்ந் தெடுக்கப்பட்ட புதிய நான்கு ஆழ் குழாய் கிணறுகள் அமைக்கப்பட விருப்பதில் அங்கே தகராறுகள் ஏற்பட்டிருக்கின்றன. பொது மக்கள் அதற்கான எதிர்ப்புகளைத் தெரிவித்து வருகின்றார்கள். எனினும் அங்கேயிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் வருவாய் அதிகாரிகள் ஆகியோருடைய ஒத்துழைப்போடு பொதுமக்களுடன் பேசி இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கின்றது.

தஞ்சை ராஜா மிராசுதார் அரசு மருத்துவமனை.

*7063—திரு. கோ. வீரையன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை ராஜா மிராசுதார் அரசு மருத்துவமனையில் பணியாற்றும் ஏழு பணியாளர்களுக்கு 7 மாத காலமாக ஊதியம் வழங்கப்படவில்லை என்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ): இப்பொருள் பற்றி அரசு ஆணை மற்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. கோ. வீரையன் : பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை ராஜா மிராசுதார் அரசு மருத்துவமனையில் பணியாற்றிய ஏழு பணியாளர்களுக்கு, அவர்கள் நியமிக்கப்பட்டதற்கு பிறகு, உரிய ஆணைகள் வழங்கப்படாததனாலே ஏழு மாதம் அவர்களுக்கு ஊதியம் கிடைக்காமலே இருந்தது. இந்தக் கேள்வி எழுப்பப்பட்டு

ஓராண்டுக்கு மேலாகிவிட்டது. இப்பொழுது அந்த ஆணை வழங்கப்பட்டிருக்கின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த ஆணை அவர்கள் நியமிக்கப்பட்ட காலத்திலிருந்து வழங்கப்பட்டு அந்தக் காலத்திலேயிருந்து அவர்களுக்கு நிலுவையில் இருந்த ஊதிய பாக்கிகளும் வழங்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இவர்களெல்லாம் 9–4–1988–லேயே சில சலுகைகள் கொடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 20–2–1990–லேயிருந்து அந்தப் பழைய ஆணைக்கு உயிரூட்டி அவர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த ஆணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து அவர்களுடைய பணிகள் வரைமுறை செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஊதியம் வழங்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு முன்னாலே அவர்கள் பணியாற்றிய காலத்திற்குள்ள ஊதியத்தைக் கொடுக்க அரசு கருணையோடு பரிசீலித்து கொடுப்பதற்கு முயற்சியெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இதை அரசு கருத்திற்கொள்ளும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ராஜா மிராசுதார் அரசு மருத்துவமனையிலே பிரசவ வார்டில் பல இலட்ச ரூபாய் செலவிலே வாங்கப்பட்ட சோனோகிராம் என்று சொல்லுகின்ற கருவி, ஏ.சி. செய்யப்படாத அறையில்—ஏ. சி. செய்யப்பட்ட அறை அங்கு இல்லாத காரணத்தினாலே—பயனற்று இருப்பது அமைச்சருடைய கவனத்திற்கு வந்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இது ஊழியர்களைப்பற்றிய கேள்வி. இந்த உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிற காரணத்தினால் உடனடியாக இதுபற்றி விசாரித்து அவருக்குப் பதிலைச் சொல்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 4952 மற்றும் 5645 மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்கத் தள்ளி வைக்கப் பெறுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக் குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

வால்பாறைத் தொகுதியில் சோலையாறு அணையருகில் லாரி விபத்துக்குள்ளானதால் உயிரிழந்தோர் மற்றும் காயமுற்றோருக்கு நிவாரணம் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

திருமதி பி. லட்சுமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையை அடுத்துள்ள சோலையார் அணை அருகில் கடந்த மாதம் 27-3-1990 ஆம் தேதியன்று அதிகாலை ஒரு லாரி விபத்திற்குள்ளாகி, விபத்தில் அதேயிடத்தில் பத்து பேர் இறந்தும், நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தும் உள்ளனர். அந்தத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் வேலையில் நிரந்தரம் இல்லாமல் தற்காலிக மாக வேலை செய்கின்ற அந்தத் தொழிலாளர்களின் நிலை கருதி மாண்புமிகு முதல்வரவர்கள் நிதியிலிருந்தும் அந்தத் தேயிலைத் தோட்ட நிர்வாகத்தவர்களிடமிருந்தும் மாண்புமிகு முதல்வரவர்கள் அந்த இறந்த குடும்பங்களுக்கு 20,000 ரூபாய் நிதியினையும் அந்தக் குடும்பத்தில், மேலும் அந்த லாரியில் பயணம் செய்தவர்களில் காயமுற்றவர்களுக்குத் தலா இரண்டாயிரம் ரூபாயும் நிவாரண நிதியாகத் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு, வால்பாறை நகரில் அடிக்கடி இப்படி விபத்துக்கள் நடக்கின்றன. அந்த விபத்துக்கள் நடப்பதற்கு அங்கு சாலைப் பராமரிப்பு சரியான முறையில் இல்லாத காரணத்தினால் அடிக்கடி இப்படிப்பட்ட விபத்துக்குள்ளாகி இறக்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது.

9-50 மணி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வால்பாறை தொகுதியை மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்து, போக்குவரத்து மலைப் பாதைகளை விரைவில் சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.